1978 மார்ச் 14]

இணைப்பு I.

[383ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 555-க்கான விடையைக் காண்க).

தொழிலாளர் துறையில் தொழிலாளர் பிரிவு (Labour Wing), தொழிற்சாலைப் பிரிவு (Factories Wing) என இரு பிரிவுகள் உள்ளன. இதில் 329 அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த இரு பிரிவுகளிலும் வேலை செய்யும் அலுவலர்கள் பின்வருமாறு :—

(1) தொழிலாளர் துறை—(Labour Department)—

(அ) தொழிலாளர் துறை அலுவலர் ..	41
(ஆ) தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்.	217
(இ) தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்.	30

(2) தொழிற்சாலை பிரிவு—(Factories Wing)—

(அ) தொழிற்சாலை ஆய்வாளர் ..	24
(ஆ) தொழிற்சாலை உதவி ஆய்வாளர்	16
(இ) தொழிற்சாலை ஆய்வாளர் (மகளிர்)	1

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர்?

(1) தொழிலாளர் பிரிவு (Labour Wing)—

(அ) தொழிலாளர் துறை அலுவலர்	2
(ஆ) தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்..	4
(இ) தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்	1

(2) தொழிற்சாலை பிரிவு—(Factories wing)

(அ) தொழிற்சாலை ஆய்வாளர்	2
(ஆ) தொழிற்சாலை உதவி ஆய்வாளர் (ஒருவர் பதவியிலிருந்து விலகிவிட்டார்) ..	3

[1978 மார்ச் 14

(இ) விகிதாச்சார முறையான 18 சதவீதம் உள்ளதா ?

தொழிலாளர் துறையைப் பொறுத்தவரையில் அரசு அலுவலர்கள் தேர்ந்தெடுப்பதைப் பற்றி பொது விதி 22 (General Rule 22) கூறுகிறது. இதன்படி நேரடியாக தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கும் பதவிகளுக்கு மட்டுமே விதி 22-ன்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவீதம் கொடுக்கப்படவேண்டும். எனவே அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 9 தொழிற்சாலை ஆய்வாளர்களில் இருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலை உதவி ஆய்வாளர்கள் பதவிக்கு 16 பேர் தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டதில் மூவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். பின் ஒருவர் பதவியிலிருந்து விலகி விட்டார். ஆகவே 18 சதவீதம் தேர்வு நடந்தபோது விகிதாச்சார முறை கடைபிடிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறை அலுவலர்களை பொறுத்தவரையில் 5 பேர் நேர்முகத் தேர்வு மூலமாக (direct recruit) தமிழ்நாடு அரசுத் தேர்வுக்குழுவால் (Tamil Nadu Public Service Commission) தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள் (Assistant Inspector of labour) 20 பேர் நேர்முகத் தேர்வு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 4 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆகவே 18 சதவீதம் விகிதாச்சார முறைப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு நேர்முகத் தேர்வு மூலமாக எடுக்கப்பட்ட பதவிகள் தவிர மற்றெல்லாம் துறை மூலமாக பதவி உயர்வு மற்றும் மாற்றல் முறைப்படி கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு 18 சதவீதம் விகிதாச்சார முறை பொருந்தாது.

(ஈ) இல்லையேல் அரசின் எதிர்கால நடவடிக்கை என்ன ?

தொழிலாளர் துறையில் தொழிலாளர் பிரிவு தொழிற்சாலை பிரிவு ஆகிய இருபிரிவுகளிலும் உள்ள காலியான இடங்களில் காலியான அரசிதழ் பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத இரு பதவிகளுக்கும் தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக நேர்முகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவல்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பொருத்தவரை 18 சதவிதம் விகிதாச்சார முறைப்படி கொடுக்கப்பட்டிருப்பதால் இந்தக் கேள்விக்கு இடமில்லை.